2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

அடிப்படை வசதிகள்

***52575—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாது மலைப் பகுதிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர், மறைந்த தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.*

முற்பகல் 11–15

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள் ஜவ்வாது மலைப் பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா என்று வினவியிருக்கின்றார்கள். திருவண்ணாமலை பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 75 கி.மீ. தொலைவில் ஜவ்வாது மலை அமைந்துள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 2345 அடி உயரத்தில் உள்ளது. 150 வருட பழமைவாய்ந்த நீர்மத்தி மரம், பீமன் அருவி, கோலப்பன் ஏரி இங்கு அமைந்துள்ளது. கோலப்பன் ஏரியில் கோடை விழாவில் படகு சவாரிகள் நடத்தப்பட்டு, சிறப்பாக நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. காவனூர் விண்வெளி

ஆராய்ச்சி மையம், குள்ளர்கள் வாழ்ந்த குகைவாழ்விடம் ஆகியவை அமைந்த சிறப்புகளைக் கொண்டதாக விளங்குகின்றது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்கள் அண்மையில் ஜமுனாமரத்தூரினை தனித் தாலுகாவாக அறிவித்து சிறப்பித்துள்ளார்கள். இங்கு ஒன்றிய அலுவலகங்கள், காவல் நிலையம், தேன் பதப்படுத்தும் மையம், சாமை, தினை, வரகு ஆகியவை பதப்படுத்தும் மையங்கள் அமையப்பெற்றுள்ளன. மேலும், இங்கு புளி, மிளகு, நெல்லிக்காய், பலாப்பழம், லிச்சி பழம் போன்றவை விவசாயிகளால் பயிரிடப்பட்டு, சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஜவ்வாது மலைக்கு வார நாட்களில் 250 முதல் 350 வரை சுற்றுலாப் பயணிகளும், சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில், 500 முதல் 700 வரை சுற்றுலாப் பயணிகளும், கோடை விழா மற்றும் கோடைக் காலங்களில் 3 இலட்சம் சுற்றுலாப் பயணிகளும் வருகைபுரிகின்றனர். ஜவ்வாது மலைப் பகுதிக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. எனவே, ஜவ்வாது மலைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள், சாலை வசதி, தங்கும் விடுதி மற்றும் பேருந்து நிலையங்கள் அமைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை மற்றும் சுற்றுலாத் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு, கருத்துரு பெறப்பட்டு, சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இருப்பது ஓர் உயிர்; அது போவது ஒரு முறை; இருக்கும்வரை என்னை நேசிக்கும் தமிழக மக்களுக்காக அது போனாலும் பரவாயில்லை என்ற எண்ணத்தோடு, இந்தக் கொரோனா பெருந்தொற்று நோய்ப் பரவல் காலத்திலும், மாவட்டம் மாவட்டமாகச் சென்று மக்கள் பணியாற்றும் மாட்சிமைத் தங்கிய தமிழக முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) உலகமே முடங்கிக் கிடக்கும் இந்த ஊரடங்கு காலத்திலும் 67,500 புதிய வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய அளவில் 30,500

2020 செப்டம்பர் 16]

கோடி ரூபாய் முதலீட்டில் 41 புதிய தொழில் திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்திட்ட, பொற்கால தமிழகத்தை உருவாக்கிட நாளும், பொழுதும் நல்லாட்சி வழங்கிடும் நாடு போற்றும் முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) 'பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி' என்பார்களே, அது போல அம்மா அவர்களின் அரசுமீது அவதூறு பரப்புவதை அனுமதிக்கமாட்டேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இந்தப் பேரவையில் பொங்கி எழுந்து போர்க்குரல் எழுப்பிவரும் மேலாண்மை மிக்க பெருமைக்குரிய எங்கள் முதலமைச்சர், திருவண்ணாமலை மாவட்டத்திற்கும், என் கலசப்பாக்கம் தொகுதிக்கும், பல நல்ல திட்டங்களைத் தந்து, எங்கள் பணிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்திடும் உன்னத முதலமைச்சர், காவேரி காத்த நாயகன், குடிமராமத்துச் செம்மல், விவசாயிகளின் விடிவெள்ளி, எங்களின் ஆற்றல்மிகு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அவருக்கு உறுதுணையாக இருந்து ஆட்சியையும், கட்சியையும் வழி நடத்திவரும் பண்பும், பணிவும்மிக்க மாண்புமிகு துணை முதலமைச்சர் அன்பு அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். பொலிவுமிக்க இந்தப் புதிய பேரவையை உருவாக்கி, பொறுமையுடன் அவையை நடத்திச் செல்லும் மேன்மைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலைப் பகுதியில் இன்றைக்கு தமிழகத்தின் ஆற்றல்மிக்க மாண்புமிகு முதலமைச்சர் மலைவாழ் பழங்குடியின மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, ஜமுனாமரத்தூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனித் தாலுகாவை உருவாக்கித் தந்துள்ளார்கள். பல்வேறு அரசுத் துறை அலுவலகங்கள் இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. புகழ்பெற்ற பீமன் நீர்வீழ்ச்சி, படகு சவாரி செய்ய கோலப்பன் ஏரி, 150 ஆண்டுக்கால பழமைவாய்ந்த நீர்மத்தி மரம், பழங்கால குள்ளர்கள் வாழ்ந்த குகை வாழ்விடங்கள், ஆசியாவிலேயே மிகப் பெரிய காவனூர் விண்வெளி ஆராய்ச்சி மையம் உட்பட இயற்கை பேரெழில் கொஞ்சும் பெட்டகமாக ஜவ்வாது மலை திகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் தினந்தோறும் வந்து இயற்கையை ரசித்து செல்கின்றனர். ஆண்டுதோறும் நடைபெறும் கோடை விழா நாட்களில் அண்டை மாவட்டங்களிலிருந்தும், மாநிலங்களிலிருந்தும் இலட்சக்கணக்கான

சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். அப்படி வந்து செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், தங்கும் விடுதிகள், கூடுதல் போக்குவரத்து வசதிகள், சாலை வசதிகள் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகியவற்றை அமைத்துக்கொடுத்தால், மலைவாழ் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்கும், பொருளாதார நிலையினை உயர்த்துவதற்கும் வழிவகை ஏற்படும். ஆகவே, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் ஜவ்வாது மலைப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதோடு மட்டுமல்லாமல், அதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து தர முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை எந்த ஓர் இடத்தினையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. இருப்பினும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை மற்றும் சுற்றுலாத் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு கருத்துரு பெறப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போளூர் வட்டம், படவேடு கிராமத்தில் அமைந்துள்ள செண்பகத்தோப்பு அணை, கடந்த 18 ஆண்டுக்காலமாக விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வராமல் இருந்தது. இன்றைக்கு தமிழகத்தில் ஒரு விவசாயி முதல்வராக இருக்கின்ற காரணத்தால் விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு 17 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, பழுதடைந்த

shutters-ஐ *மாற்றவும், பொழுதுபோக்குப் பூங்காக்கள், தங்கும் விடுதிகள், கரைகளைப் பலப்படுத்துதல் போன்ற பணிகளைச் செய்யவும் ஆவன செய்யப்பட்டிருக்கின்றது. தற்போது 90 சதவிகித பணிகள் முடிவுற்றுள்ளன.*

மேலும், படவேடு கிராமத்தில் புகழ்பெற்ற அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயில் மற்றும் புகழ்பெற்ற பல்வேறு திருக்கோயில்கள் அமைந்திருக்கின்றன. தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் இந்தப் பகுதிக்கு வந்து செல்கின்றனர். எனவே, செண்பகத்தோப்பு அணை சீரமைக்கப்பட்ட பிறகு, சுற்றுலாத் துறையின்மூலம் படகு சவாரி நடத்தவும் மற்றும் வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்துகொடுத்தும் இந்தப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செண்பகத்தோப்பு அணைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை மற்றும் கருத்துரு பெறப்பட்டு, சுற்றுலாத் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*